## அரசின் இறைத் தொழிற்பாடுகள்*

1983 ஆம் ஆண்டில் அரசின் இறைத் தொழிற்பாடுகள் 1982 ஆம் ஆண்டின் செயலாற்றத்தினைவிடக் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டின. மிக முக்கியமான விடயமென்னவெனில் நடைமுறைக் கணக்கில் சம நிலைத்தன்மை அடையப்பட்ட வேளையில் மூலதனச் செலவினத்தில் 95 சதவீதம்வரை பண வீக்க மற்ற மூலங்களூடாக நிதியிடப்பட்டமையாகும்.

### இறை வெளிப்பாடு

முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகளை உள்ளடக்கிய இவ்வாண்டிற்கான மொத்த அரச செலவினம் ரூ. 467,720 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டிலும் பார்க்க ரூ. 88,720 இலட்சம் அல்லது 23 சதவீதங்கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. அரச மொத்தச் செலவினத்தின் வளர்ச்சி வீதத்தில் ஒரு சத வீதம் கொண்ட விரைவு காணப்பட்டவேளையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இதன் பங்கு 38 சதவீதத்தில் நிலையாக இருந்தது. முன்னைய ஆண்டில் காணப்பட்ட ரூ. 8,790 இலட்சங் கொண்ட உள் வரவுகளுக் கெதிராக இவ்வாண்டுக் காலத்தில் முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள் ரூ. 11,200 இலட்சம் கொண்ட தேறிய வெளிக் கொடுப்பனவுகளை விளைவித்தன. மொத்த அரசிறை வரவுகள் ரூ. 252,100 இலட்சமாக அமைந்ததுடன் வருவாயிலேற்பட்ட ரூ. 74,010 இலட்சம் அல்லது 42 சதவீதமான குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ரூ. 1,320 இலட்சங் கொண்ட நடைமுறைக் கணக்குமிகைக்கு உதவியதுடன் முதலீடுசெய்யத் தக்க முல வளத்தில் ஒரு கூறுகவும் அமைந்தது. மூலதனச் செலவு முன்னைய ஆண்டின் 40 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 216,940 இலட்சங்களாக விளங்கி 16 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. வரவு செலவுத் திட்டப் பற்றுக்குறை ரூ. 215,620 இலட்சங்களாக விளங்கி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 18 சத வீதமாக அமைந்தது. ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டில் இது 20 சதவீதப் பங்கை வகித்தது.

வரவு செலவுத் திட்டக் குறை உள்நாட்டு, வெளிநாட்டு மூலங்கள் இரண்டிலிருந்தும் நிதியிடப்பட்டது. வெளிநாட்டு மூலங்கள் 1982 ஆம் ஆண்டின் 44 சத வீதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் குறையின் 51 சதவீதத்திற்கு நிதியிட்டன. இலக்கிடப்பட்ட ரூ. 140,240 இலட்சங் கொண்ட தொகைக்கு மாறாக வெளிநாட்டு நிதியின் மொத்தப் பெறுகைகள் ரூ. 109,020 இலட்சங்களாக அமைந்தன. செயற்றிட்ட, பண்ட, ஏனைய கடன்கள் முறையே ரூ. 51,500 இலட்சம் ரூ. 14,670 இலட்சம், ரூ. 8,600 இலட்சங்களாக விளங்கின. மொத்த வெளிநாட்டு நன்கொடைகள் ரூ. 34,250 இலட்சங்களாகக் காணப்பட்டன.

உள்நாட்டு மூலங்களில் வங்கியல்லாச் சந்தைக் கடன்பாடுகள் ரூ. 77,620 இலட்சங்களாக விளங்கின. சந்தையல்லா, வங்கியல்லாக் கடனபாடுகள் ரூ. 23,890 இலட்சங்கள் வரையிலிருந்தன. இம் மூலங்களிலி நந்தான மூலவளங்களின் மொத்தக் கிடைப்பனவு மொத்தப் பற்றுக்குறையை நிரப்புவதற்கு போதியதாக இல்லாமையினால் ரூ 12,030 இலட்சங்கொண்ட தொகை வங்கித் துறையிலிருந்து பெறப்பட்டது. தற்பொழுதுள்ள ரூபாக் கடன்களின் மீளக் கொடுப்பனவாகிய ரூ. 360 இலட்சங்கொண்ட தொகையும் பண நிலுவைகள் ரூ. 6,940 இலட்சத்தினால் உயர்த்தப்பட்டமையும் காரணமாக இவ்வாண்டிற்கான இறைத் தொழிற்பாடுகளின் விரிவுத்தாக்கம் ரூ. 4,730 இலட்சங்களாக அமைந்தது.

1983 ஆம் ஆண்டிற்கான இறைத் தொழிற்பாடுகளின் தொகுப்பு அட்டவணை 1.47 இல் தரப்பட்டுள்ளது. அரச இறைத் தொழிற்பாடுகள் காரணமாக ஏற்பட்ட தேறிய பணக்குறை கடந்த ஒன்பது ஆண்டுகளுக்குரிய ஒப்பிடத்தக்க தரவுகளுடன் புள்ளி விபரப்பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது.

---

* இறுதி இணக்கப்பாடு செய்யப்படவிருக்கும் தறகாலிக திறைசேரித் தரவுகளை அடிப்படையாகக் கொண்டது.

அட்டவணை 1.47

## அரசின் இறைத் தொழிற்பாடுகள் 1980 — 1983

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயம் | 1980 | 1981 | 1982 | 1983 ஒப்புதலளிக்கப் பட்ட மதிப்பீடுகள் | 1983 தற்காலிக மானவை* |
|---|---|---|---|---|---|
| 1. அரசிறை (அ) ... | 14,068 | 16,228 | 17,809 | 25,734 | 25,210 |
| 2. மீண்டெழும் செலவு ... | 13,249 | 16.005 | 20,110 | 25,463 | 23,958 |
| 3. முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள் (வெளிக்கொடுப்பனவு — /உட்கொடுப்பனவு+) ... | — 3,240 | — 1,716 | + 879 | — 525 | — 1,120 |
| 4. நடைமுறைக் கணக்கு (மிகை + / குறை —) .. | — 2,421 | — 1,493 | — 1,422 | — 254 | + '132 |
| 5. மூலதனச் செலவு | 13,854 | 13,373 | 18,669 | 23,131 | 21,694 |
| அதில் கடன் கரைப்பு நிதியமும், கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளும் பன்னாட்டு நிதி நிறுவனங்களுக்கான உதவு தொகைகளும் (இ) ... | (1,810) (ஆ) | (1,608)(ஆ) | (2,612) (ஆ) | (5,183) | (5,302)(ஆ) |
| 6. வரவு செலவுத் திட்டக்குறை ... | 16,274 | 14,866 | 20,091 | 23,385 | 21,562 |
| 7. குறையை நிதியிடல் .. | | | | | |
| 7.1 உள்நாட்டு மூலங்கள் ... | 9,610 | 6,696 | 11,613 | 9,361 | 11,354 |
| (அ) வங்கியல்லா சந்தைக் கடன்பாடுகள் ... | 2,700 | 2,379 | 5,894 | 8,000 | 7,762 |
| (ஆ) சந்தையல்லாக் கடன்பாடுகள் ... | — 216 | 400 | 1,713 | — | 2,389 |
| (இ) வங்கித் தொழில் முறை (ஈ) ... | 7,126(உ) | 3,917(உ) | 4.006 (உ) | 1,361 | 1,203 (உ) |
| 7.2 வெளிநாட்டு மூலங்கள் .. | 6,735 | 8,208 | 8,794 | 14,024 | 10,902 |
| (அ) பண்டக் கடன்கள் ... | 1,431 | 1,722 | 1,355 | } 14.024 | 1,467 |
| (ஆ) செயற்றிட்டக் கடன்கள் ... | 1,171 | 2,064 | 3,227 | | 5,150 |
| (இ) ஏனைய கடன்கள் .. | 1,513 | 1,701 | 836 | | — 860 |
| (ஈ) நன்கொடைகள் . | 2,620 | 2,721 | 3,376 | | 3,425 |
| 7.3 பண நிலுவைகளின் பயன்பாடு ... | — 72 | — 38 | — 315 | — | — 694 |
| 8. அரச இறைத் தொழிற்பாடுகளின் விரிவுத் தாக்கம் ... | 7,029 | 3,847 | 3.675 | 1,361 | 473 |

மூலம்: திறைசேரி.
இலங்கை மத்திய வங்கி

(அ) வெளிநாட்டு நன்கொடைகளின் கீழ் காட்டப்பட்ட அரசிறை மூலதன நன்கொடைகளை உள்ளடக்காது.

(ஆ) 1980 இன் ரூ. 2710 இலட்சம், 1981 இன் ரூ. 370 இலட்சம், 1982 இன் ரூ. 490 இலட்சம் 1983 இன் ரூ. 1460 இலட்சம் கொண்ட வெளிநாட்டு நிருவாக கடன் பாடுகளின் மீளளிப்புக்களையும் உள்ளடக்கும்.

(இ) பன்னாட்டு நிதி நிறுவனங்களுக்கான உதவு தொகைகள் 1980 இல் ரூ. 3080 இலட்சம் 1983 இல் ரூ. 2770 இலட்சம் (தற்காலிகம்)


(ஈ) பன்னாட்டு நிதி நிறுவனங்களுக்கான உதவுதொகைகளை வழங்கும் பொருட்டு மத்திய வங்கியிலிருந்தான 1980இல் ரூ. 3,080 இலட்சம், 1983இல் ரூ. 2,770 இலட்சம் (தற்காலிகம்) கொண்ட சிறப்பு முற்பணங்களையும் உள்ளடக்கும்.

(உ) வங்கித் தொழில்முறையுடனன ரூபாக் கடன்களின் மீளளிப்புக்கான 1980 இல் 250 இட்சம், 1981 இல் 320 இலடசம், 1982 இல் 160 இலட்சம் 1983 இல் 360 இலட்சம் ஆகியவற்றினை கூன்ளடக்கியது.

* தற்காலிக திறைசேரி தரவுகளின் அடிப்படையாக கொண்டது. இறுதி இணைக்கூற்றினை எதிர்நோக்குகிறது,

## அரசின் அரசிறையும் செலவும்

நிதியாண்டுகளின்படியான தரவுகள்




இலங்கை மத்திய வங்கி

UNIVERSITY OF MORATUWA LIBRARY × SRI LANKA ×

**அரசிறை**

அரசின் அரசிறை 1983 ஆம் ஆண்டில் ரூ. 252,100 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 42 சதவீதம்கொண்ட பெருமளவு அதிகரிப்பை எடுத்துக் காட்டியது. கடந்த ஐந்து ஆண்டுகாலத்தில் ஒவ்வோராண்டிற்கும் மேலாக பதிவு செய்யப்பட்ட வளர்ச்சியில் இது மிக உயர்வானதாக இருந்தது. வரிகளிலிருந்தான அரசிறை 34 சதவீதத்தினல் ரூ. 207,000 இலட்சங்களுக்கு அதிகரித்த வேளையில் வரியல்லா அரசிறை 89 சதவீதத்தினல் ரூ. 45,100 இலட்சங்களுக்கு அதிகரித்தது. வரியல்லா அரசிறையில் ஏற்பட்டபெரும் அதிகரிப்பிற்கு நாணய விதிச்சட்டத்தின் 39 ஆம் பிரிவின் கீழ் மத்திய வங்கியின் இலாபங்கள் திறைசேரிக்கு மாற்றல் செய்யப்பட்டமையே முதன்மைக் காரணமாகும். மொத்த விற்பனை வரிகள், இறக்குமதித் தீர்வைகள், தேயிலை வரி ஆகியவற்றிலிருந்தான உயர்ந்த சேகரிப்புக்கள் வரி அரசிறையில் ஏற்பட்ட பெரும் அதிகரிப்பிற்கு உதவின. மத்திய வங்கியின் இலாப மாற்றல்கள் தவிர்ந்த மொத்த அரசிறை வரி அல்லாத அரசிறைஎன்பன முன்னைய ஆண்டினைவிட முறையே 33 சதவீத, 26 சதவீத அதிகரிப்புக்களை எடுத்துக் காட்டின.

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கு மேலாக அரசின் வரி அரசிறையிலேற்பட்ட வளர்ச்சியின் வீதமானதுவரி மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தினை 1982 இன் 15 சதவீதத்திலிருந்து 1983இல் 17 சதவீதத்திற்குஉயர்த்தியது. கடந்தசில ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிப் போக்கினை இதுமாற்றியமைத்தது. இப்போக்கில் ஏற்பட்ட இம்மாற்றத்திற்கு அதிகளவு இறக்குமதிகள் வரி விதிப்புக்குட்படுத்தப்பட்டமையிலிருந்தும் தோன்றிய அதிகரித்த வருவாய்ப் பெறுகைகள்,இறக்குமதித் தீர்வைகள் மொத்த விற்பனை வரி ஆகியவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பு உயர்ந்த விலைகளின் காரணமாக தேயிலை, இறப்பர் ஆகியவற்றிலிருந்தான உயர்ந்த, வரிச் சேகரிப்புக்கள் ஆகியன பெருமளவு காரணமாக இருந்தன. அரசவரி வருவாய் செயலாற்றத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் தற்காலிகக் கணிப்புக்களின்படியான 1982 இன் 0.479 இல் இருந்து 1983 இல் 1.545 இற்கு அதிகரித்த வரி அரசிறையின் தொடர்புக் குணகங்களில் ஏற்பட்ட அதிகரிப்பிலும் பிரதிபலிக்கப்பட்டது. இவ்வாண்டுக் காலப்பகுதியில் அரசிறையில் காணப்பட்ட மிக உயர்ந்த அதிகரிப்பு அதிகரித்த வரிவீதங்கள், உறுதியான தன்மையைக் கொண்டிராத முதன்மைப் பண்டச் சந்தைகளில் காணப்பட்ட பெருமளவு விடயங்களுக்கான சாதகமான விலைகள் என்பவற்றல் ஏற்பட்ட ஒரு நிலையற்ற முக்கிய விடயமாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தொடர்பான மத்திப வங்கியின் இலாப மாற்றல்கள் தவிர்ந்த மொத்த அரசிறை 18 சதவீதத்திலிருந்து 19 சதவீதத்திற்கு அதிகரித்தது. 1983 ஆம் ஆண்டிற்கான மொத்த அரசிறை/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 21 சதவீதமாக அமைந்தது.

மொத்த அரசிறையில் வரி அரசிறையின் பங்கு 1982 இல் 87 சதவீதத்திலிருந்து 1983 இல் 82 சதவீதத்திற்கு குறைவடைந்தது. எனினும் மத்திய வங்கியின் இலாப மாற்றல்கள் அரச அரசிறையிலிருந்தும் நீக்கப்பட்டால் இரண்டு வகைகளினதும் தொடர்பான பங்கு 1983 ஆம் ஆண்டில் பெரும்பாலும் மாற்றமின்றி இருக்கும் கடந்த காலங்களைப் போன்றே வரி அரசிறையில் முக்கிய பங்கினைக் கொண்டி

ருக்கும் நேரில் வரிகள் 1982 ஆம் ஆண்டின் 78 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ 81 சதவீதமாக விளங்கி, அரசிறையினை உயர்த்துவதற்கும் பேணுவதற்குமான நோக்கத்திற்கு நேரில் வரிகளைப் பெருமளவிற்கு நம்பியிருப்பதைப் பிரதிபலிக்கின்றது. இவ்வாண்டுக் காலத்தில் நேரில் வரிகள் 39 சதவீதத்தால் அதிகரித்ததுடன் இவ்வதிகரிப்பிற்கு மொத்த விற்பனைவரிகள் இறக்குமதித் தீர்வைகள் தேயிலை வரிகள் ஆகியவற்றின் அதிகரிப்பிலிருந்தும் தோன்றிய உயர்ந்த சேகரிப்புக்களே பெருமளவு காரணமாகும்.

1983இன் மொத்த வரி அரசிறையில் 30 சதவீதத்திற்கு வகைகூறிய ரூ. 62,240 இலட்சங் கொண்ட மொத்தச் சேகரிப்பினைக் கொண்டிருந்த மொத்த விற்பனை வரி முன்னைய ஆண்டிலும் பார்க்க 54 சதவீதங்கொண்டதொரு அதிகரிப்பை எடுத்துக் காட்டுகின்றது. இவ்வதிகரிப்பிற்கு உயர்ந்த வரி வீதங்கள் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு செலுத்தப்பட்ட மொத்த விற்பனை வரியின் மீது இறக்குமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட வரிக்கொடுகடன்கள் புறக்கீடு செய்யப்பட்டமை, சிறந்த சட்ட நடை முறைப்படுத்தல் ஆகியன பெருமளவு காரணங்களாகும். தயாரிப்புத் துறைமீதான மொத்த விற்பனை வரி ரூ. 27,180 இலட்சங்களாகவும் தயாரிப்பல்லாத் துறையின் மீதான மொத்த விற்பனை வரி ரூ. 18,910 இலட்சங்களாகவும் காணப்பட்டன. இறக்குமதிகள் மீதான மொத்த விற்பனைவரி ரூ. 16,150 இலட்சங்களாக விளங்கின.

பன்னாட்டு வர்த்தகத்தின் மீதான வரிகள் முன்னைய ஆண்டினைவிட 50 சதவீதங்கொண்ட அதிகரிப்பினை பதிவுசெய்ததுடன் இது மொத்த நேரில் வரிகளில் 1982ஆம் ஆண்டின் 55 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 59 சதவீதத்திற்கு வகைகூறியது. மொத்த வரி அரசிறையில் பன்னாட்டு வர்த்தகத்தின் மீதான வரியின் பங்கு 1982ஆம் ஆண்டின் 43 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 48 சதவீதமாக இருந்தது. பன்னாட்டு வர்த்தகத்திலிருந்தான வரிகளின் மீது அதிகளவிற்கு தங்கியிருந்தமையினால் வெளிநாட்டு வர்த்தகத்திலேற்படும்மாற்றங்கள் உள்நாட்டு வரவு செலவுத்திட்டத்தில் பாதிப்பினை ஏற்படுத்தும். மறுபுறத்தில் சுழற்சி முறைச் செழிப்புக் காலத்தில் எதிர்பாராத இலாபங்களிலிருந்தும் கிடைக்கும் உயர்ந்த அரசிறைப் பெறுகைகளில் ஏற்படும் அதிகரிப்புக்கள் ஒரு தற்காலிக நிகழ்ச்சியாகவே இருக்கும் என்பதனால் இது செலவினத்தில் ஒரேமாதிரியாக அதிகரிப்பைக் கட்டுப்படுத்தாது.

ஏற்றுமதித்தீர்வைகளிலிருந்தான மொத்த அரசிறைச் சேகரிப்புக்கள் ரூ. 24,590 இலட்சங்களாக விளங்கி 1982ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1 சதவீதங்கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. இதன்விளைவாக பன்னாட்டு வர்த்தகத்தின் மீதான வரியில் ஏற்றுமதித்தீர்வையின் பங்கும், மொத்த வரி அரசிறையில் இதன் விகிதசமமும் 1982—1983ஆம் ஆண்டுகளுக்கிடையில் முறையே 38 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்கும், 16 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன. கடந்த அண்மைக்காலங்களில் அவதானிக்கப்பட்ட போக்கினை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் இது தொடர்பான வீழ்ச்சிக்கு தேயிலையின் ஏற்றுமதி அளவுகளின் மீது விதிக்கப்படும் ஏற்றுமதித்தீர்வையிலிருந்தான

சேகரிப்புக்கள் வீழ்ச்சியடைந்தமை முக்கிய காரணமாக இருந்தது. முன்னைய ஆண்டில் தேயிலையிலிருந்து பெறப்பட்ட ஏற்றுமதித்தீர்வைப் பெறுகைகளான ரூ. 12,900 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் 1983 யூலையில் ஏற்றுமதித்தீர்வை வீதங்களில் அதிகரிப்புக்கள் காணப்பட்டபோதிலும் 11 சதவீதங்கொண்ட வீழ்ச்சியை எடுத்துக்காட்டியது,இவ்வீழ்ச்சி தேயிலையின் ஏற்றுமதியளவில் ஏற்பட்ட 13 சதவீதங்கொண்ட வீழ்ச்சியினால் விளைந்ததாகும். இறப்பரைப் பொறுத்தவரையில் படிப்படியாக அதிகரித்துச்செல்லும் தீர்வையை அடிப்படையாகக்கொண்ட பெறுமான விகித வரியில் கீழ்நோக்கிய திருத்தமும் ஏற்றுமதியளவில் 5 சதவீதங்கொண்ட வீழ்ச்சியும் காணப்பட்டபோதும் சாதகமான ஏற்றுமதி விலைகளின் காரணமாக மொத்த அரசிறைச் சேகரிப்புக்கள் 1982இனதைவிட 13 சதவீதத்தால் அதிகரித்தன. இறப்பர் மீதான மொத்த ஏற்றுமதித்தீர்வை 1983இல் ரூ. 8,520 இலட்சங்களாக விளங்கியது. தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மீதான ஏற்றுமதித்தீர்வை ரூ. 2,410 இலட்சங்களாக விளங்கி கடந்த ஆண்டினைவிட 26 சதவீதங்கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்தது. ஏனைய ஏற்றுமதிகளிலிருந்தான அரசிறை ரூ. 760 இலட்சங்களாக விளங்கி கடந்த ஆண்டினைவிட 20 சதவீதங்கொண்ட வீழ்ச்சியை எடுத்துக்காட்டியது.

இரண்டாவது பெரிய அரசிறை விடயமான இறக்குமதித் தீர்வைகள் ரூ. 48,360 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 50 சதவீதங்கொண்ட அதிகரிப்பைக் காட்டின. மொத்த வரி அரசிறையில் இம்மூலம் 1982 ஆம் ஆண்டின் 21 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1983இல் 23 சதவீதத்திற்கு வகை கூறியது. பன்னாட்டு வர்த்தகத்தின்மீதான வரிகள் தொடர்பான இறக்குமதித் தீர்வைகளின் பங்கு மாற்றமின்றி 49 சதவீதமாக இருந்தது. இறக்குமதித் தீர்வைச் சேகரிப்புக்களில் ஏற்பட்ட உண்மையான அதிகரிப்பிற்கு வரி வீதங்களில் ஏற்பட்ட அதிகரிப்பும், இதுவரை இறக்குமதித் தீர்வைக்குட்படாதிருந்த அரிசி, மா, பெற்றோலியம், வளமாக்கி போன்றவற்றினை உள்ளடக்கும் விதத்தில் வரி விதிக்கத்தக்க விடயங்கள் விரிவாக்கப்பட்டமையும் முக்கிய காரணங்களாகும்.

புகையிலை, தேயிலை, குடிவகை ஆகியவற்றிலிருந்தான உயர்ந்த சேகரிப்புக்களின் காரணமாக தெரிந்தெடுக்கப்பட்ட விற்பனை வரிகளின் மொத்தம் 1983இல் 42 சதவீதத்தினால் ரூ. 32,300 இலட்சங்களுக்கு அதிகரித்தது. புகையிலைமீதான வரிகள் ரூ. 14,310 இலட்சங்களாக விளங்கி 9 சதவீதங்கொண்ட அதிகரிப்பை எடுத்துக்காட்டியமைக்கு 1983ஆம் ஆண்டில் மூன்று தடவைகள் புகையிலைமீதான வரிகள் மேல்நோக்கித் திருத்தப்பட்டமையே காரணமாகும். 1983 மாச்சில் கீழ்மட்ட விலைகள் கிலோவொன்றிற்கு ரூ. 22.00 இலிருந்து ரூ. 26.00 இற்கு மேல்நோக்கித் திருத்தப்பட்டிருந்தபோதும் தேயிலை மீதான தெரிந்தெடுக்கப்பட்ட விற்பனை வரிப் பெறுகைகள் ரூ. 9,320 இலட்சங்களாக விளங்கி கடந்த ஆண்டினைவிட ஆறு மடங்கு அதிகரிப்பைப் பதிவுசெய்தமைக்கு இவ்வாண்டுக்காலத்தில் நிலவிய தேயிலை ஏல விலைகளில் ஏற்பட்ட பெரும் அதிகரிப்பே காரணமாக இருந்தது. குடிவகையிலிருந்தான அரசிறை ரூ. 8,670 இலட்சங்களாகவிளங்கி 7 சதவீதங்கொண்ட அதிகரிப்பை எடுத்துக்காட்டியது.

வருமான வரிகள் ரூ. 33,670 இலட்சங்களாக விளங்கி 15 சதவீதங்கொண்ட தொரு அதிகரிப்பை எடுத்துக்காட்டின. கூட்டுவரிகள் ரூ. 24,750 இலட்சங் களாக விளங்கி 17 சதவீத அதிகரிப்பை எடுத்துக்காட்டியவேளையில் கூட்டல்லா வரிகள் ரூ. 8,920 இலட்சங்களாக விளங்கி 10 சதவீதத்தால் அதிகரித்தன. கூட்டு வருமானத்தின் மீதான வரிகளைப் பொறுத்தவரையில் இவ்வதிகரிப்பு தயாரிப்பு, வங்கித்தொழில், போக்குவரத்துத் துறைகளிலிருந்தான உயர்ந்த சேகரிப்புக்களினுல் ஏற்பட்டதாகும். அரசதுறைக் கூட்டு முயற்சிகளிலிருந்தான வரிகள் ரூ. 11,890 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டின் 40 சதவீதத் துடன் ஒப்பிடுகையில் கூட்டு வருமானவரியில் ஏறத்தாழ 48 சதவீதத்தை உள்ளடக்கியிருந்தது.

வரியல்லா அரசிறையில் 1983ஆம் ஆண்டில் முக்கிய விடயமாக விளங்கியது ரூ. 15,000 இலட்சங் கொண்ட மத்திய வங்கியின் இலாப மாற்றல்களாகும். மத்திய வங்கிக்கான அரசின் படுகடன் கடப்பாட்டினைத் தீர்ப்பனவு செய்வதற் கும் பயன்படுத்தும் பொருட்டு நாணய விதிச் சட்டத்தின்* நியதிகளுக்கிணங்க இம்மாற்றல் மேற்கொள்ளப்பட்டது வரியல்லா அரசிறையில் இரண்டாவது பெரும் விடயமான வர்த்தக முயற்சிகளின் மொத்தப் பெறுகைகள் ரூ. 14,570 இலட்சங்களாக விளங்கி 17 சதவீதங் கொண்ட அதிகரிப்பை எடுத்துக் காட்டிய மைக்கு அஞ்சல், தொலைத் தொடர்புப் பணிகளிலிருந்தான அதிகரித்த பெறுகை கள் பெரிதும் காரணமாகும். வரியல்லா அரசிறையின் ஏனைய முக்கிய விடயங் களாக ரூ. 8,210 இலட்சங்கொண்ட வாடகை, வட்டி பங்கிலாபங்களும் ரூ. 3,500 இலட்சங்களைக் கொண்ட விற்பனை மற்றும் கட்டணங்கள் ஆகியனவும் இருந்தன. வாடகை, வட்டி பங்கிலாபங்கள் ஆகியன 1982ஆம் ஆண்டினைவிட 96 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தமைக்கு திறைசேரி முற்பணங்களின் மீது உணவு ஆணையாளரிடமிருந்து கிடைத்த வட்டியின் அதிகரித்த பெறுகைகளும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்தான உயர்ந்த பங்களிப்புக்களும் பெரிதும் காரணங்களாக இருந்தன. பல்வகை விற்பனைகளிலிருந்தான பெறுகைகளில் ஏற் பட்ட குறைவு காரணமாக விற்பனைகளும், கட்டணங்களும் 24 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தன.

---

* நாணய விதிச் சட்டத்தின் (39)ஆம் பிரிவின் கீழ் பின்வருமாறு கூறப்படுகின்றது.

"39. ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்து அறுபது நாட்கள் முடிவடையுமுன்னர் பின்வரும் விதிகளுக்கிணங்க நாணயச் சபை தேறிய இலாபத்தினைப் பங்கீடு செய்யும் :-

(அ) மூதலாவதாக — பின்வரும் பகுதியில் வரையறுக்கப்பட்ட நாணயச் சீராக்கக்கணக்கு நடைமுறையிலிருக்கும்போது இக்கணக்கு முற்றாக ஒழிக்கப்படும்வரை மத்திய வங்கி யின் தேறிய இலாபம் முழுவதும் நாணயச் சீராக்கக் கணக்கினைக் குறைப்பதற்குப் பயன்படுத்தப்படலாம்.

(ஆ) இரண்டாவதாக — நாணயச் சீராக்கக் கணக்கு ஒழிக்கப்பட்ட பின்னா எஞ்சியிருக்கும் தேறிய இலாபம் ஏதாவது இருப்பின் வங்கியின் மொத்த மூலதனக் கணக்குகள் வங்கி யின் மொத்தச் சொத்துக்களுக்கும் அதன் தங்க வெளிநாட்டு நாணயச் சொத்துக்களுக் கும் இடையில் உள்ள வேறுபாட்டில் ஆகக் குறைந்தது பதினைந்து சதவீதத்திற்குச் சமமான தொகையாவது அடையும் காலம் வரையும் மிகைக்குக் கொண்டு செல்லப் பட வேண்டும்.

(இ) மூன்ருவதாக — முந்திய ஒழுங்குவிதிகளுக்கிணங்கிய பின் ஏதாவது தேறிய இலாபம் எஞ்சியிருப்பின் நிதி, திட்டமிடல் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடன் கலந் தாலோசித்த பின்னர் மத்திய வங்கிக்கு அரசின் கடப்பாடுகள் ஏதும் வெளிநிற்பின் அதனை ஒழிப்பதற்கு அல்லது ஒன்றுதிரட்டிய நிதியத்திற்குச் செலுத்தப்பட்டு வரவு வைக்கப்படுவதற்குப் பயன்படுத்தப்படலாம்.

**மீண்டெழும் செலவு**

முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள் நீங்கலான மொத்த மீண்டெழும் செலவு 1983இல் ரூ. 239,580 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டின் 26 சதவீதம்கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 19 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. மொத்த அரச செலவினத்தில் மீண்டெழும் செலவின் பங்கு 1982ஆம் ஆண்டின் 53 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 51 சதவீதமாக அமைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தொடர்புபடுத்தி நோக்குகையில் 1983ஆம் ஆண்டில் மீண்டெழும் செலவினம் 20 சதவீதத்தில் மாற்றமின்றியிருந்தது.

மீண்டெழும் செலவில் ஏற்பட்ட பெருமளவான அதிகரிப்பு பொதுப்படு கடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள், தனியார் ஊதியங்கள், ஓய்வூதியங்கள் என்பனவற்றால் ஏற்பட்டதாகும். இவற்றின் மொத்தம் ரூ 140,880 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டின் 33 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1982ஐவிட 23 சதவீதங் கொண்ட அதிகரிப்பை எடுத்துக்காட்டியது. மொத்த மீண்டெழும் செலவினத்தில் இவ்விடயங்களின் பங்கு 1982இல் 57 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1983இல் 59 சதவீதமாக அமைந்தது. பொதுப்படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 30 சதவீதத்தால் ரூ. 66,240 இலட்சங்களுக்கு அதிகரித்ததுடன் 1982இன் 25 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மீண்டெழும் செலவில் 28 சதவீதத்திற்கு வகைகூறியது. குறுங்கால திறைசேரிக் கடன்பாடுகள் மீதான வட்டிகளையும் உள்ளடக்கிய உள்நாட்டுப் படுகடன் மீதான மொத்த வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 53,450இலட்சங்களாக விளங்கி 27சதவீதங்கொண்ட அதிகரிப்பை எடுத்துக்காட்டின. திறைசேரி உண்டியல்கள் மீதான கொடுப்பனவுகள் ரூ. 20,820 இலட்சங்களாகவிளங்கிய வேளையில் ரூபாக்கடன்கள் மீதான வட்டி ரூ. 32,280 இலட்சங்களாக விளங்கின. ஒப்பிடுகையில், முன்னைய ஆண்டில் இவை முறையே ரூ. 20,010 இலட்சங்களாகவும், ரூ. 21,670 இலட்சங்களாகவும் விளங்கின. ரூபாப்பிணைகள் மீதான வட்டிக் கடன்பாடுகள் 49 சதவீதத்தால் மிக அதிகளவில் அதிகரித்தமைக்கு 1982ஆம் ஆண்டிலும் 1983ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியிலும் பிணைகளின் வழங்கலில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பும் 1983 யூலைக்கு முன்னர் வழங்கப்பட்டவற்றின் மீது உயர்ந்த வட்டி வீதங்கள் செலுத்தப்பட்டமையும் காரணங்களாகும். வெளிநாட்டுப் படுகடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 40 சதவீதத்தால் ரூ. 12,790 இலட்சங்களுக்கு அதிகரித்தன. தனிப்பட்ட ஊதியங்கள், ஓய்வூதியங்கள் ஆகியவற்றை ஒன்றாக எடுப்பின் அவை 18 சதவீதத்தால் ரூ. 74,640 இலட்சங்களுக்கு அதிகரித்தமைக்கு மாதமொன்றிற்கு திரட்டல் பணமாக ரூ. 1000இற்கும் குறைவாகப்பெறும் அரசதுறை ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் பெறுவோருக்கும் மாதமொன்றிற்கு ரூ. 100 கொண்ட சம்பள அதிகரிப்பு, ஓய்வூதியங்கள் மீதான உயர்ந்த செலவு திரட்டப்பட்ட கூலிகளை அடிப்படையாகக். கொண்ட ஓய்வூதிய நன்கொடை ஆகியன காரணங்களாக அமைந்தன.

மாற்றல்கள், உதவுதொகைகள் மீதான மீண்டெழும் செலவு முன்னைய ஆண்டிற்கான ரூ. 56.620 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 64,100 இலட்சங்களாக விளங்கியது. எனினும், மொத்த மீண்டெழும் செலவினத்தில் மாற்றல்களின் பங்கு 1982இன் 28 சதவீதத்திலிருந்து 1983இல் 27 சதவீதங்களுக்கு வீழ்ச்சியடைந்தது. உணவு, மண்ணெண்ணெய் முத்திரை திட்டங்களின் மீதான செலவினம் முறையே ரூ. 14.270 இலட்சம், ரூ. 2,870 இலட்சங்களாக விளங்கியதுடன் இவை இரண்டினதும் மொத்தத் தொகை மொத்த மாற்றல்களில் 29 சதவீதத்திற்கு வகைகூறியது. குழந்தைகள் பாலுணவு மீதான நுகர்வோர் உதவுதொகை

ரூ. 650 இலட்சங்களாக விளங்கிய வேளையில் தேசிய பாற்சபைக்கான உற்பத்தியாளர் உதவு தொகை ரூ. 210 இலட்சங்களாகக் காணப்பட்டது. சாதகமான உற்பத்தியாளர் விலைகளின் காரணமாக பசும் தேயிலைக்கான விலை ஆதரவுத் திட்டத்தின் மீதான செலவினம் முன்னைய ஆண்டில் ரூ. 240 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 10 இலட்சங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. தேசியசேமிப்பு வங்கிக்கான வட்டி உதவுதொகை 1982இன் ரூ. 4,010 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 5,000 இலட்சங்களாகக் காணப்பட்டது. இதில் ரூ. 3,300 இலட்சங்கொண்ட தொகை இவ்வாண்டுக்குரியதாகவும் மிகுதி 1982 நிதியாண்டுடன் தொடர்பானதாகவும் இருந்தது. வளமாக்கி உதவுதொகை ரூ. 6,940 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டிலும் பார்க்க 25 சதவீதங் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியமைக்கு உதவுதொகை வீதங்கள் குறைக்கப்பட்டமையே காரணமாகும். இறக்குமதித் தீர்வை தள்ளுபடித் திட்டத்தின் கீழான செலவினம் 1982இல் ரூ. 7,130 இலட்சங்களிலிருந்து 1983இல் ரூ. 7,800 இலட்சங்களுக்கு அதிகரித்தது.

அரச கூட்டுத்தாபனங்களது இழப்புக்களை ஈடுசெய்வதற்கான மாற்றல்கள் 1982ஆம் ஆண்டின் ரூ. 240 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 1000 இலட்சங்களாகக் காணப்பட்டது. முக்கிய உதவி பெற்றவையாக தேசிய புடவைக் கூட்டுத்தாபனம் (ரூ. 340 இலட்சம்) அரச பொறியியல் கூட்டுத்தாபனம் (ரூ. 240 இலட்சம்) ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச்சபை (ரூ. 200 இலட்சம்) தேசிய பொதிகளிலடைத்தல் பொருட்கள் கூட்டுத்தாபனம் (ரூ. 80 இலட்சம்) ஆகியன வீளங்கின. நடைமுறை மாற்றல்கள் இலங்கை மின் சபை (ரூ. 4,410 இலட்சம்) இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை (ரூ. 1,830 இலட்சம்) நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை (ரூ. 1,400 இலட்சம்) சுற்றுலாச்சபை (ரூ. 750 இலட்சம்) அரச உடைமையாக்கப்பட்ட வியாபாரமுயற்சிகள் (ரூ 590 இலட்சம்) நெற் சந்தைப்படுத்தும் சபை (ரூ. 480 இலட்சம்) ஆகியவற்றிற்கு மேற்கொள்ளப்பட்டன. தேசிய தொழில்பயிலுநர் சபை, தேசிய இளைஞர் பணிகள் சபை ஆகியவற்றிற்கு முறையே ரூ. 500 இலட்சங்களும் ரூ, 320 இலட்சங்களும் வழங்கப்பட்டன. பல்கலைக் கழகங்கள், உள்ளூராட்சிச் சபைகளுக்கான மாற்றல்கள் முறையே ரூ. 1930 இலட்சமாகவும், ரூ. 3,490 இலட்சமாகவும் காணப்பட்டன.

துணை நிரப்பு ஒதுக்கல்களையும் உள்ளடக்கிய மொத்தச் செலவினத்தின் மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில் உண்மையான மீண்டெழும் செலவினம் ரூ. 23,120 இலட்சம் அல்லது 9 சதவீதம் கொண்ட குறைப்பயன்பாட்டினை எடுத்துக்காட்டியது. செலவினத்தில் குறிப்பிடத்தக்க குறைப்பயன்பாட்டினைப் பதிவுசெய்த விடயங்களாக வட்டிக் கொடுப்பனவுகள் (ரூ. 7,450 இலட்சம்) வளமாக்கி உதவுதொகை (ரூ. 3,060 இலட்சம்) தேசிய சேமிப்பு வங்கிக்கான உதவுதொகை (ரூ. 1,700 இலட்சம்) உணவு முத்திரைத் திட்டம் (ரூ. 830 இலட்சம்) பசும் தேயிலைக்கான விலை ஆதரவுத்திட்டம் (ரூ. 230 இலட்சம்) ஆகியன விளங்கின.

இவ்வாண்டுக் காலத்தில் திருத்துதல், பேணல் ஆகியவற்றின் மீதான செலவு ரூ.1,950 இலட்சங்களாக இருந்தபோதும் மொத்த மீண்டெழும் செலவினத்தில் இது 1 சதவீதமான மிகக்குறைந்த அளவை மட்டும் கொண்டிருந்தது. இச்செலவினம் அண்மைய கடந்த ஆண்டுகளில் மூலதனச் செலவினத்தில் கணிசமான அதிகரிப்பு பதிவுசெய்யப்பட்டதன் காரணமாக தொடர்ந்துவரும் ஆண்டுகளில் பெரும் எண்ணிக்கையான செயற்றிட்டங்கள் தொடங்கப்படுவதனல் குறிப்பிடத்தக்களவில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆகவே வரி, வரியல்லா அரசிறை இரண்டினையும் சாதாரண அதிகரிப்புடன் இணையாக வைத்திருப்பதற்கு மட்டுமன்றி வரவு செலவுத் திட்டத்தில் நடைமுறைக் கணக்குப் பற்றுக் குறையைத் தடுக்கும்பொருட்டு மேலதிக மீண்டெழும் செலவுக் கடப்பாடுகளை வழங்குவதற்

காகவும் இவ்விரண்டு வரியிலும் ஒரேயளவான வளர்ச்சியைப் பேணுவது இன்றி யமையாததாகும். வரி நிருவாகத்தில் ஒழுங்குபடுத்தலும் முன்னேற்றமும் மூல வளங்களின் மாற்றல்களில் பெரும் வளர்ச்சியை ஏற்படுத்தமுடிகின்ற வேளையில் அரச கூட்டுத்தாபன முயற்சிகள் பங்கிலாபங்கள்/இலாப மாற்றல்கள், கட்டணங் கள் போன்றவற்றின் மூலமாக பெருமளவு அரச முதலீடுகளுக்கு உதவவேண்டு மெனக் கேட்டுக் கொள்ளப்படவேண்டும்.

**முற்பணக் கணக்குகள்**

முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள் 1982 இன் ரூ. 8,790 இலட்சங்கொண்ட தேறிய உட்கொடுப்பனவொன்றை ஏற்படுத்தியமைக்கு மாறாக 1983 இல் ரூ. 11,200 இலட்சங்கொண்ட தேறிய வெளிக்கொடுப்பனவொன்றை விளைவித் தன. மொத்தத் தொழிற்பாடுகளில் இம்மாற்றம் முழுமையும் எதிர்பார்க்கப் படாததொன்றாக இருக்கவில்லை, ஏனெனில் 1983இற்கான மூல வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூ. 5,250 இலட்சங் கொணடதொரு தேறிய வெளிக் கொடுப்பனவொன்று எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறிருப்பினும், முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள் மீண்டும் வரவுசெலவுத்திட்ட மூலவளங்களின் முதன்மையானதொரு பயன்படுத்துநராக விளங்கி, 1983இற்கான வருவாய் பெறுகைகளில் ஏறக்குறைய 4 சதவீதமளவிற்கு வகைகூறி நின்றமை குறிப் பிடத்தக்கதொன்றாகும். அரச திணைக்களங்களின் முற்பணக்கணக்கு தொழிற்பாடு கள் ரூ. 4,160 இலட்சங்கொண்ட தேறிய வெளிக்கொடுப்பனவொன்றை விளைவித் தன. உணவு ஆணையாளர் (ரூ. 1,050 இலட்சம்), புகைவண்டித்திணைக்களம் (ரூ. 690 இலட்சம்), முதன்மைச் சுங்கச் சேகரிப்பாளர் (ரூ. 520 இலட்சம்), சந்தைப் படுத்தல் திணைக்களம் (ரூ. 140 இலட்சம்), செலாவணிக் கணக்கின் வேறுபாடு (ரூ. 430 இலட்சம்) ஆகியன முதன்மை வெளிக்கொடுப்பனவுகளாக விளங்கின. பின்னையது இலங்கை / சீன வர்த்தகக் கணக்கின் முடிவுறுத்தலுடன் தொடர் புடைய கணக்கியல் சீராக்கமாக மாத்திரம் விளங்கியது. இதில் தேறிய வெளிக் கொடுப்பனவு, பொருத்தமான நிலையங்கள் அல்லது திணைக்களங்களுக்காக தொங் கற் கணக்கு கட்டணங்களில் தொடர்ந்திருந்த செலாவணி வீத வேறுபாடுகளின் மீதான இழப்புக்களுடன் தொடர்புடையதாகும். முற்பணக்கணக்குகள், மிகை நிலுவைகள் ஆகியவற்றிலிருந்தான கடன்களின் கீழ் பகுக்கப்பட்டு தேசிய புட வைக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட ரூ. 4,200 இலட்சங்கொண்ட முற் பணம் இவ்வாண்டின் முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகளை வெகுவாகப் பாதித்ததெனலாம். இதில் ரூ. 4,150 இலட்சம் மக்கள் வங்கிக்கான கூட்டுத் தாபனத்தின் படுகடனைத் தீர்ப்பதற்காக ஏற்பட்டதாகும். எவ்வாறாயினும் ரூபாப் பிணைகளை கொள்வனவு செய்ததன் மூலம் வங்கி இக்கடன் மீளளிப்புக்களை, அரசுக்கு மீண்டும் செலுத்தியது. முற்பணங்களின் பரந்த அடிப்படையிலான பகுப்பின்கீழ், ஏனைய முக்கிய வெளிக்கொடுப்பனவுகளாக இலங்கைக் காப் புறுதிக் கூட்டுத்தாபனம் (ரூ. 500 இலட்சம்), வளமாக்கித் தயாரிப்புக் கூட்டுத் தாபனம் (ரூ. 350 இலட்சம்), இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை (ரூ. 250 இலட்சம்), அரச ஊழியரின் 'ஆ'' கணக்கு (ரூ. 620 இலட்சம்) ஆகியன விளங் கின. இந்த வகையில் முதன்மை தேறிய உட்கொடுப்பனவுகள் பின்வருவனவற்

றில் அமைந்திருந்தன. தேசிய நீர்வழங்கல் வடிகால்சபை (ரூ. 720 இலட்சம்), நெற் சந்தைப்படுத்தல் சபை (ரூ. 610 இலட்சம்), தேசிய வீடமைப்பு அபி விருத்தி அதிகாரசபை (ரூ. 250 இலட்சம்). இதனுல் முற்பணக் கணக்குகள் மிகை நிலுவைகள் ஆகியவற்றின் கடன்கள் மீதான மொத்தத் தேறிய வெளிக்கொடுப் பனவுகள் 1983இல் ரூ. 4,680 இலட்சமாக விளங்கின. களஞ்சிய முற்பணக் கணக்குகளின் மீதான தேறியவெளிக் கொடுப்பனவுகள் ரூ. 1,930 இலட்சமாக விளங்கியமைக்கு, தொலைத்தொடர்பு களஞ்சியத்திற்கான ரூ. 2,120 இலட்சங் கொண்ட தேறிய வெளிக்கொடுப்பனவும், பொதுக் களஞ்சியத்திலிருந்தான ரூ. 110 இலட்சம் உள்நாட்டு வைத்தியக் களஞ்சியத்திலிருந்தான. ரூ. 100 இலட் சங்கொண்ட உட்கொடுப்பனவுமே முச்கிய காரணமாகும். ஏனைய பல்வகை முற்பணக் கணக்குகள் 1983இல் ரூ. 420 இலட்சங்கொண்டதொரு வெளிக் கொடுப்பனவினைப் பதிவுசெய்தன.

## மூலதனச் செலவு

1983இல் கடன்கரைப்பு நிதிய உதவுதொகைகளையும் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய மொத்த மூலதனச் செலவு ரூ. 216,940 இலட் சங்களாக விளங்கி முன்னைய ஆண்டிலும் பார்க்க 16 சதவீதங் கொண்ட அதி கரிப்பை எடுத்துக்காட்டியது. மாருக 1982இல் இது 40 சதவீதத்தால் அதிகரித் தது. அரசின் மொத்த செலவினத்தில் மூலதன செலவின் பங்கு 1982இன் 49 சத வீதத்திலிருந்து 1983இல் 46 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமான மொத்த மூலதனச் செலவும் முன்னைய ஆண்டின் 19 சதவீதத்திலிருந்து 1983இல் 18 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. கடன்கரைப்பு நிதிய உதவுதொகைகளும் கடன்தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளும் நீங்கலான மூலதனச் செலவு 1982இன் ரூ. 160,570 இலட்சங்களுடன் ஒப்பிடுகை யில் ரூ. 166,690 இலட்சங்களாக விளங்கியது. கடன்கரைப்பு நிதிய உதவுதொகை கள் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் நீங்கலான மூலதனச் செலவினை மொத் தத் தேசிய உற்பத்திச் சுருக்கியினுல் சீராக்கம் செய்யப்பட்டபொழுது 1970ஆம் ஆண்டு விலைகளிலான மூலதனச் செலவு 1982ஆம் ஆண்டின் ரூ. 38,040 இலட் சங்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 34,020 இலட்சங்களாக விளங்கி 11 சதவீதங்கொண்ட வீழ்ச்சியை எடுத்துக்காட்டியது, எனினும் மூலதனச் செலவு 1982இல் ரூ. 18,360 இலட்சம்கொண்ட திறைசேரி வைப்புக்களுக்கான ஒதுக்குகளுடன் ஒப்பிடுகையில் 1983இல் 14,540 இலட்சம்கொண்ட மாற்றல்களை உள்ளடக்கியிருந்தது. அத்த கைய மாற்றல்களுக்காக செலவினங்கள் சீராக்கம் செய்யப்பட்டபொழுது கடன் கரைப்பு நிதிய உதவுதொகைகள் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் என்பன நீங்கலாக மூலதனச் செலவு பெயரளவு நியதிகளில் 7 சதவீத அதிகரிப்பைக் காட் டிய வேளையில் உண்மை நியதிகளில் இது 8 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. அமைச்சுக்களின்படியான மூலதனச் செலவின் பகுப்பாய்வு புள்ளி விபரப் பின்னிணைப்பு அட்டவணை 32இல் தரப்பட்டுள்ளது.

கடன்கரைப்பு நிதிய உதவுதொகைகள், கடன்தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் என்பன நீங்கலான உண்மையான மூலதனச் செலவினை துணை நிரப்பு மதிப்பீடு களையும் உள்ளடக்கிய மதிப்பிடப்பட்ட மொத்த செலவினத்துடன் ஒப்புநோக்கு

கையில் ரூ. 39,810 இலட்சங்கொண்ட அல்லது 19 சதவீதமான குறைச்செலவினை எடுத்துக்காட்டியது. திறைசேரி வைப்புக்களின் மாற்றல்களுக்காக மூலதனச் செலவினம் சீராக்கம் செய்யப்பட்டபொழுது குறைச்செலவினம் ரூ. 54,350 இலட்சங்களாக அமைந்து 26 சதவீதங்கொண்ட குறைச்செலவினை எடுத்துக்காட்டியது

மகாவலி அபிவிருத்தி மேலாண்மைச் சபையின் தற்காலிகத் தரவுகளின் அடிப்படையில் 1983இல் மகாவலி செயற்றிட்டத்தின் மீதான உண்மையான மூலதனச் செலவு ரூ. 71,310 இலட்சங்கள் வரையில் இருந்தது. இதுவைப்பு மாற்றல்களிலிருந்து செலவிடப்பட்ட முன்னைய ஆண்டில் ஏற்பட்ட செலவினையும் உள்ளடக்கியது. இவ்வாண்டுக் காலத்தில் ரூ. 51,290 இலட்சங்கொண்ட மொத்த மூலதனச் செலவு கொத்மலை (ரூ. 20,540 இலட்சம்) விக்டோரியா (ரூ. 18,390 இலட்சம்) இரந்தெனிகல (ரூ. 8,910 இலட்சம்) மாதுறுஓயா (ரூ. 3,450 இலட்சம்) ஆகிய துரிதப்படுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய நான்கு செயற்றிட்டங்களின் மீதும் செலவிடப்பட்டது. கீழ் நீரோட்ட அபிவிருத்தி வேலைகளின் பொருட்டு செலவிடப்பட்ட ரூ. 12,760 இலட்சங்களில் அமைப்பு 'பி'யில் ரூ.7,530 இலட்சமும், அமைப்பு 'சி'யில் ரூ. 5,230 இலட்சமும் பயன்படுத்தப்பட்டன. மேலும் ரூ. 2,980 இலட்சங்கொண்ட தொகை மினிப்பே மாற்று வடிநில கால்வாயின்மீதுசெலவிடப்பட்ட வேளையில் நிலை 1இலும் நிலை 11இலும் ரூ. 2,930 இலட்சம் கொண்டதொகை செலவிடப்பட்டது. அத்துடன் ரூ. 1,340 இலட்சங்கொண்ட தொகை மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்பான ஏனைய நடவடிக்கைகளின்மீது செலவிடப்பட்டது.

உள்ளூராட்சி வீடமைப்பு கட்டடவாக்க அமைச்சின்படி வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களின்மீது ரூ. 5,470 இலட்சங்கொண்ட தொகை செலவிடப்பட்டது. இது அமைச்சின் மொத்த மூலதனவாக்கத்தில் ஏறத்தாழ 23 சதவீதத்தை ஈர்த்துக்கொண்டது. நகர வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் மீதான செலவினம் ரூ. 3,920 இலட்சங்களாக விளங்கியது. உதவியளிக்கப்பட்ட சுய உதவி வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் (மாதிரிக் கிராமங்களும் உள்ளார்ந்த வசதிகளும் உள்பட) தேர்தற் தொகுதி வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம், காணி இழப்பீடு ஆகியன ரூ. 1,320 இலட்சங் கொண்ட நிதிச் செலவினைக் கொண்டிருந்தன. அரச ஊழியர் விடுதிகளின் கட்டடவாக்கத்தின் மீதான செலவினம் ரூ. 80 இலட்சங்களாக அமைந்திருந்தது. மேலும் ரூ. 150 இலட்சம் கொண்ட தொகை சேரிக் குடியிருப்புக்களை முன்னேற்றுவதற்காக நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபையினாலும் பொது வசதிகள் சபையினாலும் செலவிடப்பட்டன.

கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் மீதான மொத்தச் செலவினம் 1982இன் ரூ. 930 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் 1983இல் ரூ. 3,470 இலட்சங்களாகக் காணப்பட்டது. இதில் ரூ. 2,810 இலட்சங்கொண்டதொகை கொழும்புப் பெரும்பாகப் பிரதேசத்தின் நீர் வழங்கல் திட்டம், கழிவுநீர் வடிகால் திட்டங்கள் ஆகியவற்றின் நிலை 11இன் மீது தேசிய நீர் வழங்கல் வடிகால் சபையினால் செலவிடப்பட்டது. முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தின் மீதான மூலதன உதவுதொகைகளாக ரூ. 600 இலட்சம் கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டது. கட்டுநாயக்காவிலுள்ள முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தின் மின்வழங்கலுக்காக ரூ. 60 இலட்சங்கொண்ட தொகையை இலங்கை மின் சபை செலவிட்டது.

இவ்வாண்டுக்காலத்தில் சிறிசயவர்தனபுர அபிவிருத்தி செயற்றிட்டத்தின்மீது முக்கியமான அமைச்சுக்களினுல் ரூ. 7,050 இலட்சங் கொண்ட மொத்தத்தொகை செலவிடப்பட்டது. இதில் ரூ. 6,500 இலட்சங்கொண்ட தொகை சிறிசயவர்த்தன புர வைத்தியசாலைக்குச் செலவிடப்பட்டது. கட்டடத்திணைக்களம் ரூ. 380 இலட் சத்தினைச் செலவிட்டவேளையில் இலங்கை நில மீட்பு அபிவிருத்திக் கூட்டுத்தாப னம் பாராளுமன்ற நிருவாகக்கட்டடத் தொகுதிகளுடன் தொடர்பான கட்டுமான நடவடிக்கைகளின் மீது ரூ. 160 இலட்சங்களைச் செலவிட்டது. மேலும் ரூ. 10 இலட்சங்கொண்ட தொகை சிறி சயவர்த்தனபுரவின் நீர் வழங்கல் திட்டத்தின் மீது தேசிய நீர்வழங்கல் வடிகால் சபையினுல் செலவிடப்பட்டது.

1983ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழான ஒதுக்கு முன்னைய ஆண்டினைப்போன்று ரூ. 4,200 இலட்சங்களாக இருந் தது. இவ்வாண்டுக் காலத்தில் மொத்தச் செலவினம் ரூ. 4,170 இலட்சங்களாக விளங்கியது. ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மீதான செலவினம் ரூ. 2,660 இலட்சங்களாக விளங்கியது. ஒப்பிடுகையில் வரவு செலவுத்திட்ட ஒதுக்கு ரூ. 4,590 இலட்சங்களாக இருந்தது.

மொத்த மூலதனச் செலவினம் முதலீடுகளுக்காக கடனுக வழங்கப்பட்ட ரூ. 8,010 இலட்சங்கொண்ட தொகையையும் உள்ளடக்குகிறது. முன்னைய ஆண்டு டன் ஒப்பிடுகையில் 11 சதவீதம் கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. மொத்தக் கடன் செலவில் இலங்கை மின்சபை ரூ. 4,340 இலட்சங்களைப் பெற்றது. ஏனைய முக்கிய பெறுநர்களாக இலங்கை மத்தியபோக்குவரத்துச்சபை (ரூ. 2620 இலட்சம்) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச்சபை (ரூ. 450 இலட்சம்) வரை யறுக்கப்பட்ட இலங்கை கலதாரி கோட்டல் (ரூ. 500 இலட்சம்) உள்ளூர் கடன் கள் அபிவிருத்தி நிதி (ரூ. 100 இலட்சம்) ஆகியன காணப்பட்டன.

### வரவு செலவுத்திட்ட குறையை நிதியிடல்

1983ஆம் ஆண்டின் இறைத் தொழிற்பாடுகள் ரூ. 215,620 இலட்சங்கொண்ட வரவு செலவுத்திட்டக் குறையை விளைவித்தது. இது முன்னைய ஆண்டின் பற்றுக்குறையைவிட 7 சதவீதங் கொண்டதொரு மிதமான அதிகரிப்பாகும். மொத்த அரச செலவினத்துடன் தொடர்புறுத்தி நோக்குகையில் வரவு செலவுத் திட்ட குறை 53 சதவீதத்திலிருந்து 46 சதவீதத்திற்குக் குறைவடைந்து 1982 ஆம் ஆண்டினை விடக் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எடுத்துக் காட்டியது. சந்தை விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறையின் பங்கு 1982 இன் 20 சத வீதத்திலிருந்து 1983இல் 18 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. முன்னைய மூன்று ஆண்டுகட்கும் மாறுக நடைமுறைக்கணக்கு ரூ. 1,320 இலட்சங்கொண்ட மிகையை உருவாக்கியதன் காரணமாக 1983இல் பற்றுக்குறை மூலதனச் செலவின் அள விற்குள் மட்டுப்படுத்தப்பட்டது.

குறையை நிதியிடலில், குறையில் 51 சதவீதம் வெளிநாட்டு மூலவளங்களின் மூலம் நிதியிடப்பட்டது. ஒப்பிடுகையில் இது 1982இல் 44 சதவீதமாக இருந்தது. இவ்வாண்டுக் காலத்தில் கிடைக்கத்தக்கதாயிருந்த மொத்த வெளிநாட்டு நிதி ரூ. 109,020 இலட்சங்களாக விளங்கி 24 சதவீதங் கொண்டதொரு அதிகரிப்பை

எடுத்துக்காட்டியது. முன்னைய ஆண்டினைப் போன்றே வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிடைக்கத்தக்கதாயிருந்த மொத்த வெளிநாட்டு நிதியின் பங்கு ஏறத்தாழ 9 சதவீதமாக இருந்தது. செயற்றிட்டக் கடன்கள் பண்டக்கடன்கள், ஏனைய கடன்கள் வடிவில் பெறப்பட்ட மொத்த வெளிநாட்டு நிதி ரூ. 74,770 இலட்சங்களாக விளங்கிய வேளையில் நன்கொடைகளாகக் கிடைத்த தொகை ரூ. 34,250 இலட்சங்களாக அமைந்தது. இதனால் மொத்த வெளிநாட்டு நிதியில் நன்கொடைகளின் பங்கு 38 சதவீதத்திலிருந்து 1983இல் 31 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. செயற்றிட்டக் கடன்கள் பண்டக் கடன்கள் வடிவில் கிடைத்த வெளிநாட்டுக் கடன்கள் முறையே ரூ. 51,500 இலட்சங்களாகவும், ரூ. 14.670 இலட்சங்களாகவும் விளங்கின. மிகுதிக்கு ஏனைய கடன்கள் வகைகூறின. பின்னையது யூரோ நாணய வர்த்தகக் கடன்களிலிருந்து பெறப்பட்ட ஒரு பகுதியான ரூ, 6,070 இலட்சத்தினையும் 1982இல் யப்பானிய யென் கடனிலிருந்து பெறப்பட்ட ரூ. 2,530 இலட்சங் கொண்ட தொகையின் பயன்பாட்டையும் உள்ளடக்கியிருந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்பொழுது உள்நாட்டு மூலங்களிலிருந்து கிடைக்கத் தக்கதாயிருந்த மொத்த மூலவளங்கள் ரூ. 113,540 இலட்சங்களாக விளங்கி ரூ. 2,590 இலட்சம் அல்லது 2 சதவீதங்கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தன. வங்கியல்லா மூலங்களிலிருந்தான உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடுகள் ரூ, 77,620 இலட்சங்களாக விளங்கியதுடன் முன்னைய ஆண்டிலும் பார்க்க 32 சதவீதங் கொண்டதொரு அதிகரிப்பைப் பதிவு செய்தன. மொத்த வரவு செலவுத் திட்டக் குறையில் இதன் பங்கு 36 சதவீதமாக அமைந்த வேளையில் குறைக்கான உள்நாட்டு நிதியிடலின் பங்கு 68 சதவீத அளவில் உயர்வானதாக இருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தொடர்புறுத்தி நோக்குகையில் இம் மூலங்களிலிருந்து கிடைக்கத்தக்கதாயிருந்த மொத்த மூலவளங்கள் 1982 இன் 5.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 6.3 சதவீதமாக அமைந்தது. வங்கியல்லா மூலங்களில் ஏற்பட்ட இம்முன்னேற்றத்திற்கு கடன்கரைப்பு நிதியம் (ரூ. 30,370 இலட்சம்) ஊழியர் சேமநிதியம் (ரூ. 23,550 இலட்சம்) தேசிய சேமிப்பு வங்கி (ரூ. 23,000 இலட்சம்) ஆகியவற்றின் மூலம் ரூபாக்கடன்களுக்கு அதிகரித்த உதவு தொகைகள் கிடைத்தமையே பெரும் காரணமாகும்.

சந்தையல்லா மூலங்களிலிருந்து கிடைக்கத்தக்கதாயிருந்த மொத்த நிதி 1982இன் ரூ. 17,130 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 23,890 இலட்சங்களாக விளங்கியது. இதனால் வரவு செலவுத்திட்டப் குறையின் மொத்த நிதியிடலில் இதன்பங்கு 1982இன் 9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 11 சதவீதமாக அமைந்திருந்தது. இம்மூலத்திலிருந்தான கடன்பாடுகள் வைப்புக்களுக்கான செலவு ஒதுக்குகளின் மாற்றல்களுடன் தொடர்பான நடவடிக்கைளிலிருந்து எழும் பல்வேறுவகையான வைப்புக்களையும் உள்ளடக்கியுள்ளது. மொத்த சந்தையல்லாக் கடன்பாட்டில் நிருவாகக் கடன்பாடுகள் ரூ. 2,190 இலட்சங்களாக விளங்கின.

வங்கித்தொழில் மூலங்களிலிருந்தான உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடுகள் 1982இன் ரூ, 40,060 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 12 030 இலட்சங்களாக விளங்கியமையால் பணவீக்கநிதிமூலங்களைநாடுவது மிகவும் குறைக்கப் பட்டிருக்கின்றது. இதன்படி வரவு செலவுத் திட்டக்குறைக்கு நிதியிடலில் வங்கி நிதியிடலின் பங்கு 1982இன் 20 சதவீதத்திலிருந்து 1983இல் 6 சத

வீதத்திற்குக் குறைக்கப்பட்டது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நோக்குகையில் இது 1982இன் 4 சத வீதத்திலிருந்து 1983இல் 1 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. வங்கித்தொழில் துறையிலிருந்தான கடன்பாடுகள் மத்திய வங்கியிலிருந்து பெற்ற ரூ. 6,540 இலட்சங்கொண்ட முற்பணங்கள், ரூபாக்கடன் களின் கீழான ரூ. 4,150 இலட்சம், திறைசேரி உண்டியல்கள் மூலமான ரூ. 1.340 இலட்சம் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தன. வரவு செலவுத் திட்ட குறைக்கான மத்திய வங்கியின் நிதியிடல் ரூ. 13,400 இலட்சங்களாகவிளங்கியது. இது பன்னாட்டு நாணய நிதியத்திற்கான உதவுதொகைக் கொடுப்பனவுகள் காரணமாக ஏற்பட்ட ரூ. 2,770 இலட்சங்கொண்ட சிறப்பு முற்பணங்களையும் உள்ளடக்கிய (மத்திய வங்கி முற்பணகளான ரூ. 6.540 இலட்சங்களையும்) திறைசேரி உண்டியல் உடைமைகள் வர்த்தக வங்கிகளிலிருந்து மத்தியவங்கிக்கு மாறியதன் காரணமாக எழுந்த ரூ. 6,860 இலட்சங் கொண்ட திறைசேரி உண்டியல் நிதியையும் உள்ளடக்கியிருந்தது. வர்த்தகவங்கிகள் வரவு செலவுத் திட்ட குறையினை நிதியிட ரூ. 4,150 இலட்சங்கொண்ட ரூபாப் பிணைகளைக் கொள்வனவு செய்த வேளையில் இதன் நிதிகளில் திறைசேரி உண்டியல்களின் கூறு ரூ. 5,520 இலட்சங்களினால் வீழ்ச்சியடைந்து ரூ. 1,370 இலட்சங் கொண்ட எதிர்க்கணிய நிதியிடலை விளைவித்தது. அனைத்து மூலங்களிலிருந்தும் பெறப்பட்ட நிதிகள் வரவு செலவுத் திட்ட குறையை ரூ.6 ,940 இலட்சத்தினால் விஞ்சி இணைக்கிணை நிதியத்தில் ரூ. 2,680 இலட்சங்கொண்ட அதிகரிப்பையும் காசு நிலுவைகளில் ரூ. 4,260 இலட்சங்கொண்ட அதிகரிப்பையும் ஏற்படுத்தின.

**பொதுப்படுகடன்**

1983ஆம் ஆண்டின் இறுதியில் வெளிநின்ற மொத்தப் பொதுப்படுகடன் ரூ. 983,800 இலட்சங்களாக அமைந்து முன்னைய ஆண்டிலும் பார்க்க 23 சதவீதம் கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. மொத்தப் பொதுப்படுகடன் ரூ. 523,550 இலட்சங்கொண்ட உள்நாட்டுப் படுகடனையும் ரூ. 460,250 இலட்சங்கொண்ட வெளிநாட்டுப் படுகடனையும் உள்ளடக்கியிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உள்நாட்டுக் கொடுகடன் 15 சதவீதத்தால் அதிகரித்தது. ஏனைய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்ததன் காரணமாக தோன்றிய ரூ. 52,540 இலட்சங்கொண்ட மேலதிகப் பொறுப்புக்களை உள்ளடக்கிய வெளிநாட்டுக் கடன்பாடு 33 சதவீதத்தால் அதிகரித்தது. செலாவணிவீத வேறுபாடுகளிலிருந்தும் தோன்றிய மேலதிகப் பொறுப்பினைத் தவிர்ந்த வெளிநின்ற வெளிநாட்டுப்படுகடன் 19 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்து படுகடனில் உயர்ந்த வளர்ச்சி வீதத்தைப் பிரதிபலித்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகப் பார்க்கையில் வெளிநாட்டுப்படுகடன் 1982இன் 35 சதவீதத்திலிருந்து 1983இல் 38 சதவீதத்திற்கு அதிகரித்தது. தேறிய பொதுப்படுகடன் (கடன்கரைப்பு நிதியம் நீங்கலான பொதுப் படுகடன்) 1983 இறுதியில் ரூ. 864,230 இலட்சங்களாக அமைந்து 21சதவீதங்கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்தது.

பொதுப்படுகடன் மீதான மொத்த வட்டிக் கொடுப்பனவுகள் 1983 ஆம் ஆண்டில் ரூ. 65,930 இலட்சங்களாக அமைந்து 1982 ஆம் ஆண்டின் 37 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டினைவிட 30 சதவீதம் கொண்ட

அதிகரிப்பை எடுத்துக்காட்டியது. மொத்தப்பொதுப்படுகடன் முன்னைய ஆண்டினைவிட 23 சதவீதத்தால் அதிகரித்தபோதும் இவ்வாண்டுக்காலத்தில் வட்டிக் கடப்பாடுகளின் வளர்ச்சி அதிகரிப்பில் குறைவு ஏற்பட்டமைக்கு சலுகைவீத வட்டிகளில் பெறப்பட்ட வெளிநாட்டுக்கடன்பாடுகள் கணிசமாக அதிகரித்தமையே காரணமாகும். உள்நாட்டுக்கடன்பாடுகள் மீதான சராசரி வட்டி வீதங்கள் 1983 இல் ஆண்டிற்கு 11.6 சதவீதமாக அமைந்திருந்தவேளையில் வெளிநாட்டுக் கடன்பாடுகள் மீதான வட்டிவீதம் 3.6 சதவீதமாகவிருந்தது. எனினும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நோக்குகையில் மொத்த வட்டிக்கொடுப்பனவுகள் 5.1 சதவீதத்திலிருந்து 1983 இல் 5.4 சதவீதத்திற்கு அதிகரித்து கடந்த அண்மைக் காலத்தில் அவதானிக்கப்பட்ட அதிகரித்த போக்கினைப் பேணின. 1983 இல் மொத்தப்படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (வட்டிக்கடப்பாடுகள்) கடன்தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள், கடன்கரைப்பு நிதிய உதவுதொகைகள், ரூ. 116,180 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 51 சதவீதங் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளன.

அட்டவணை 1.48

**வெளிநின்ற உள்நாட்டுப் படுகடன்**

பத்து இலட்சம் ரூபாய்களில்


| வகுப்பு | 1982 | 1983 | சதவீத மாற்றம் |
|---|---|---|---|
| அ. நடுத்தர நீண்டகாலப் படுகடன் ... | 26,104.4 | 32,150.2 | 23.2 |
| இதில் | | | |
| ரூபாக்கடன்கள் ... | 25,800.4 | 31,953.6 | 23.8 |
| நிருவாகக் கடன்பாடுகள் ... | 303.9 | 196.5 | —35.3 |
| ஆ. குறுந்தவணைப் படுகடன் ... | 19,471.0 | 20,204.4 | 3.8 |
| திறைசேரி உண்டியல்கள் ... | 17,320.0 | 17,400.0 | 0.5 |
| வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் ... | 10.7 | 9.9 | —7.5 |
| மத்திய வங்கி முற்பணங்கள் ... | 2,140.3 | 2,794.5 | 30.6 |
| மொத்தம் ... | 45,575.4 | 52,354.6 | 14.9 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

1983 இறுதியில் மொத்த உள்நாட்டுப்படுகடன் ரூ. 321.500 இலட்சங்கொண்ட நீண்ட, நடுத்தர காலப்படுகடனையும் ரூ. 202,040 இலட்சங்கொண்ட குறுங்காலப் படுகடனையும் உள்ளடக்கியிருந்தன. இவ்வாண்டுக்காலத்தில் நடுத்தர, நீண்ட காலப்படுகடன் முன்னைய ஆண்டினைவிட 23 சதவீதத்தாலும் குறுங்காலப்படு கடன் 4 சதவீதத்தாலும் அதிகரித்தன. இவ்வேறுபட்ட வளர்ச்சிவீதங்களைப் பிரதிபலிக்கின்றவிதத்தில் மொத்த உள்நாட்டுப்படுகடனில் நடுத்தர, நீண்டகாலப் படுகடன்களின் பங்கு 57 சதவீதத்திலிருந்து 1983இல் 61 சதவீதத்திற்கு அதிகரித்தது. 1983 இறுதியில் வெளிநின்ற உள்நாட்டுப் படுகடனின் விபரமான உள்ளமைப்பு முன்னைய ஆண்டின் ஒப்பிடத்தக்க எண்தொகைகளுடன் அட்டவணை 1.48 இல் தரப்பட்டுள்ளது.

மொத்த நடுத்தர, நீண்டகால உள்நாட்டுப்படுகடனில் ஏறத்தாழ 99 சதவீதத்தைக் கொண்டிருக்கும் ரூபாக்கடன்கள் 1983ஆம் ஆண்டில் 24 சதவீதத்தால் அதிகரித்தன. இவ்வாண்டுகாலத்தில் ரூபாப்பிணைகளிலிருந்து பெறப்பட்ட மொத்த

## பொதுப்படுகடனின் உள்ளடக்கம்




இலங்கை மத்திய வங்கி.

* கடன்கழைப்பு நிதியங்கள் நீங்கலாக மொத்தப் பொதுப்படுகடன். 1983 எண் தொகைகள் தற்காலிகமானவை.


மூலவளங்கள் ரூ. 81,880 இலட்சங்களாக அமைந்து வரவு செலவுத்திட்ட மூலமதிப்பீடான ரூ. 80,000 இலட்சங்களை விஞ்சின. 1982இல் ரூபாப்பிணைகளின் மொத்த வழங்கல் ரூ. 60,000 இலட்சங்களாக விளங்கியது. 1983இல் ரூபாக்கடன்களுக்கான உயர்ந்தமட்ட உதவுதொகைகளுக்கு ஊழியர்சேமநிதியம், கடன்கரைப்பு நிதியம் ஆகியவற்றின் உதவுதொகைகள் அதிகரித்தமையே முக்கிய காரணமாக இருந்தது. கடந்த காலங்களைப் போன்றே 1983 ஆம் ஆண்டிலும் ரூபாக்கடன்களுக்கான முதன்மை உதவுநர்களாக கடன்கரைப்பு நிதியம், ஊழியர் சேமநிதியம், தேசிய சேமிப்பு வங்கி ஆகியன விளங்கின.

1983ஆம் ஆண்டில் ரூபாப்பிணைகளுக்கான கடன்கரைப்புநிதிய உதவுதொகை ரூ. 30,36 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 47 சதவீதங்கொண்ட அதிகரிப்பை எடுத்துக்காட்டியது. கடன்கரைப்பு நிதியங்களின் மூலவளங்களில் ரூ. 3,000 இலட்சங்கொண்ட தொகை நகர அபிவிருத்தி மேலாண்மைச்சபையின் தொகுதிக்கடன்களிலும் ரூ. 500 இலட்சங்கொண்ட தொகை அரச ஈட்டு முதலீட் வங்கியின் தொகுதிக்கடன்களிலும் முதலிடப்பட்டது. 1983 ஆம் ஆண்டில் கடன் கரைப்பு நிதியத்தின் உயர்ந்த மட்ட முதலீடுகளுக்கு கடன்கரைப்பு நிதியங்களுக் கான அரசின் உதவுதொகைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினால் தோன்றிய முதலிடத் தக்க மூலவளங்களின் அதிகரித்தமட்டம், அதன் முதலீடுகளிலிருந்து கிடைத்த உயர்ந்தமட்ட வருமானம் ஆகியன காரணங்களாக விளங்கின. கடன்கரைப்பு நிதியத்திற்கான அரசின் உதவுதொகைகள் ரூ. 35,610 இலட்சங்களாக அமைந்து முன்னைய ஆண்டிலும் பார்க்க பெரும்பாலும் இரண்டு மடங்கு அதிகரிப்பை எடுத்துக்காட்டியது.

இவ்வாண்டுக்காலத்தில் இம்முதலீடுகளிலிருந்தான வருமானம் 1982 ஆம் ஆண்டின் ரூ. 9,470 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 13,680 இலட்சங்களாக விளங்கியது. ரூபாக்கடன்களுக்கு கடன்கரைப்பு நிதியினை வழங்குவதனை நிறுத்துவது என எடுக்கப்பட்டகொள்கைத் தீர்மானத்தின் காரணமாக 1984 சனவரியிலிருந்து மீளக்கொடுப்பனவு நோக்கங்களுக்காக 1984 சனவரிக்கு முன்னர் வழங்கப்பட்ட கடன்களுக்கோ அல்லது புதிய கடன் வழங்கல்களுக்கோ கடன் கரைப்பு நிதியங் களுக்கு உதவுதொகைகளைச் செலுத்துமாறு அரசுகேட்டுக்கொள்ளப் படமாட்டாது. கணக்கிடுகின்ற முறைகள் ரூபாக்கடன்களுக்கான உதவுதொகைகளின் மூலம் வரவு செலவுத்திட்டத்துக்கும் உதவு தொகைகளின் மூலம் நகர அபிவிருத்தி மேலாண்மைச்சபை, அரச ஈட்டு முதலீட்டுவங்கிஆகியவற்றின் தொகுதிக்கடன்களுக்கும் கடன்கரைப்பு நிதியங்கள் மூலவளங்களை வழிப்படுத்துகின்றன என்ற உண்மையை மறைக்கக்கூடாது. இத்தொழிற்பாடுகளும் அரச செலவினத்தை யும் வெளிநின்ற மொத்த உள்நாட்டுப் படுகடன் தொகையையும் அதிகரித்தன.

1983 இல் ரூபாக்கடன்களுக்கான ஊழியர் சேமநிதியத்தின் உதவுதொகை ரூ. 23,550 இலட்சங்களாக அமைந்து 1982ஆம் ஆண்டினைவிட 66சதவீதங்கொண்ட கணிசமான அதிகரிப்பைக்காட்டியது. இவ்வதிகரிப்பிற்கு ஊழியர்சேம உதவுதொகை களிலிருந்தும் முதலீடுகளிலிருந்தான வருமானத்திலிருந்தும் கிடைத்த உயர்ந்த பெறுகைகளினூடாக பெறப்பட்ட மேலதிக மூலவளங்களின் கிடைப்பனவே பெரிதும்

# உள்நாட்டுப் படுகடனின் உள்ளடக்கம்




இலங்கை மத்திய வங்கி

* கடன்கரைப்பு நிதியங்கள் நீங்கலான மொத்தப் பொதுப்படுகடன். 1983இன் எண் தொகைகள் தற்காலிகமானவை

காரணமாக இருந்தது. 1983ஆம் ஆண்டில் உறுப்பினர் உதவுதொகைகளிலிருந்தான மொத்தப் பெறுகைகள் ரூ. 12,260 இலட்சங்களாகவும் முதலீடுகளிலிருந்தான வருமானம் ரூ. 9,260 இலட்சங்களாகவும் விளங்கின.

1983 இல் ரூபாக்கடன்களுக்கான தேசிய சேமிப்பு வங்கியின் உதவுதொகைகள் ரூ. 23,000 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 2 சதவீதம் கொண்ட வீழ்ச்சியை எடுத்துக்காட்டியமைக்கு தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்புத்திரட்டலில் ஏற்பட்ட 18 சதவீதம் கொண்ட வீழ்ச்சியே காரணமாகும் 1982 ஆம் ஆண்டின் ரூ. 22,340 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் 1983இல் தேசிய சேமிப்பு வங்கி ரூ. 18,360 இலட்சங்கொண்ட சேமிப்புக்களைமட்டுமே திரட்டின. இதன் காரணமாக இவ்வாண்டில் ரூபாக்கடன்களுக்கான தேசிய சேமிப்பு வங்கியின் உதவுதொகை வங்கியின் கடந்தகால முதலீடுகளின் மீதான முதிர்ச்சியடைந்த பெறுகைகளிலிருந்து கிடைத்த ரூ. 5,000 இலட்சங்கொண்ட தொகையையும் உள்ளடக்கியுள்ளது.

ஏனைய மூலவளங்கள் உதவிய ரூ. 4 960 இலட்சங்கள் வர்த்தகவங்கிகளிலிருந்தான ரூ. 4,150 இலட்சங்கொண்ட தொகையையும் உள்ளடக்கியிருந்தது. பின்னையதொகை தனியாக மக்கள் வங்கியிலிருந்தே கிடைத்ததுடன் இது தேசிய புடவைக் கூட்டுத்தாபனத்தின் வங்கிக்கானபடுகடன் அரசினல் தீர்ப்பனவு செய்யப்பட்டதுடன் தொடர்புடையதாக அமைந்திருந்ததுடன் இத்தொகை மீண்டும் அரசிற்கு மாற்றல் செய்யப்பட்டது.

இவ்வாண்டுகாலத்தில் அரசு 1983 யூலையில் இருந்தும் வழங்கப்பட்ட ரூபாப் பிணைநிதிகளைத் திருத்தியமைத்தது. வட்டிவீதங்கள் ஆண்டிற்கு 16 சதவீதத்திலிருந்து 14 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டவேளையில் முதிர்ச்சிக்காலம் 3 ஆண்டுக்களிலிருந்து 5 ஆண்டுகளுக்கு அதிகரிக்கப்பட்டது. இதன்படி 3 ஆண்டுகள் முதிர்ச்சிக்காலத்துடன் ஆண்டிற்கு 16 சதவீத வட்டியில் ரூ. 42,500 இலட்சம் பெறுமதிகொண்ட ரூபாப்பிணைகள் 1983 ஆம் ஆண்டின் முன்னரைப்பகுதியிலும் 5 ஆண்டுகள் முதிர்ச்சிக்காலத்துடன் ஆண்டிற்கு 14 சதவீத வட்டியில் ரூ. 35,230 இலட்சங்கொண்ட தொகை பின்னரைப்பகுதியிலும் வழங்கப்பட்டன. மக்கள் வங்கிக்கு வழங்கப்பட்ட ரூபாப்பிணைகள் ஆண்டிற்கு 12சதவீதவட்டியில் 10ஆண்டுகள் முதிர்ச்சிக்காலத்தைக் கொண்டனவாக சிறப்புவழங்கல்களாக வழங்கப்பட்டன. 1983ஆம் ஆண்டுக்காலத்தில் முதிர்ச்சியடைந்த 20 ரூபாக்கடன்கள்மீது மீளச்செலுத்தப்பட்ட ரூபாக்கடன்களின் மொத்தத்தொகை ரூ. 20,350 இலட்சங்களாகவிளங்கியது.

இவ்வாண்டுக்காலத்தில் திறைசேரி உண்டியல்கள் மீதான மேலதிகக் கடன்பாடுகள் முன்னைய ஆண்டின் ரூ. 34,000 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 800 இலட்சங்களாக விளங்கியது. இதன்படி 1983ஆம் ஆண்டு இறுதியில் வெளிநின்ற திறைசேரி உண்டியல்களின் தொகை ரூ. 174,000 இலட்சங்களாக விளங்கியது. இவ்வாண்டுக்காலத்தில் திறைசேரி உண்டியல்களில் உச்சஎல்லை ரூ. 230,000 இலங்களாக மாற்றமின்றி இருந்தது. வட்டிவீதங்களின் கீழ் நோக்கிய திருத்தங்களைத் தொடர்ந்து ஆண்டொன்றிற்கான வட்டிவீதம் 13 சத வீதத்திலிருந்து 12 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. வங்கித்துறைகள் வசமிருந்த திறைசேரி உண்டி

யல்கள் 1982இன் ரூ. 171,730 இலட்சங்களிலிருந்து 1983இல் ரூ. 172,650 இலட்சங்களுக்கு அதிகரித்தது. இதில் மத்தியவங்கி வசமிருந்தவை ரூ. 6,640 இலட்சங்களால் ரூ. 172,570 இலட்சங்களுக்கு அதிகரித்த வேளையில் வர்த்தகவங்கிகள்வசமிருந்தவை ரூ. 5,720 இலட்சங்களால் வீழ்ச்சியடைந்து ஆண்டினிறுதியில் வெளிநின்ற தொகை ரூ. 80 இலட்சங்கொண்ட மிகக்குறைந்த அளவை அடைந்தது. வங்கியல்லாதுறையின் வசமிருந்த தொகை 1983 இறுதியில் ரூ. 1,350 இலட்சங்களாக அமைந்து முன்னைய ஆண்டின் மட்டத்திலிருந்து ரூ. 120 இலட்சங்கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது.

நாணய விதிச்சட்டத்தின் 89ஆம் பிரிவின்கீழ் அரசிற்கான மத்தியவங்கியின் தற்காலிக முற்பணங்கள் 1982 ஆம் ஆண்டின் ரூ. 6,040 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1983இல் ரூ. 3,770 இலட்சங்கொண்ட அதிகரிப்பைக் காட்டின. இவ்வாண்டுக் காலத்தில் பன்னாட்டு நாணய நிதியத்திற்கான உதவுதொகைகளைச் செலுத்துவதற்காக அரசிற்குக் கிடைக்கச் செய்யப்பட்ட மத்தியவங்கியின் சிறப்புக்கடன்கள் ரூ. 2,770 இலட்சங்களாக விளங்கியது. 1983ஆம் ஆண்டின் இறுதியில் மத்திய வங்கி முற்பணங்கள் தொடர்பாக அரசின் மொத்த வெளிநின்ற பொறுப்பு ரூ. 27,940 இலட்சங்களாக விளங்கியது. இது இவ்வாண்டில் பெறப்பட்ட ரூ. 2,770 இலட்சங்கொண்ட சிறப்புக்கடன்களையும் 1980இல் இதே கடனாகப் பெறப்பட்ட ரூ. 3,080 இலட்சங்களையும் உள்ளடக்கியிருந்தது, ஆண்டின் இறுதியில் வரிஒதுக்குச் சான்றிதழ்களின் வெளிநின்ற தொகை ரூ. 107 இலட்சங்களிலிருந்து ரூ. 99 இலட்சங்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டுக் காலத்தில் புதிய வழங்கல்கள் ரூ. 159,900 ஆக அமைந்தவேளையில் ரூ. 869,589 தொகைகொண்ட சான்றிதழ்கள் கொடுப்பனவிற்காக ஒப்படைக்கப்பட்டன. வெளிநின்ற வெளிநாட்டு நிருவாகக் கடன்பாடுகள் 1982இல் ரூ. 3,040 இலட்சங்களிலிருந்து 1983இல் ரூ, 1,960 இலட்சங்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டுக்காலத்தில் நிருவாகக் கடன்பாடுகளின் மொத்த பகிர்ந்தளிப்புக்கள் ரூ. 110 இலட்சங்களாக விளங்கியவேளையில் மீள் கொடுப்பனவுகள் ரூ. 1,460 இலட்சங்களாகக் காணப்பட்டன.

1983இறுதியில் வெளிநின்ற மொத்த வெளிநாட்டுக் கடன்பாடு ரூ. 460,250 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டின் 19சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 33 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. மற்றைய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவில் ஏற்பட்ட தேய்வு 1983இல் வெளிநின்ற பொறுப்புக்கள் ரூ. 52,540 இலட்சங்களினால் அதிகரிக்க வழிவகுத்தது. ஒப்பிடுகையில் 1982இல் இது ரூ. 4,400 இலட்சங்கொண்ட அதிகரிப்பினைக்காட்டியது. இவ்வாண்டுக்காலத்தில் நன்கொடையாளர்களினால் பதிவழிக்கப்பட்ட படுகடன்கள் ரூ. 260 இலட்சங்களாக விளங்கியதுடன் இதில் ரூ. 180 இலட்சம் செயற்றிட்டக்கடன் மீதானதாயும் மிகுதி பண்டக்கடன்கள் மீதானதாயும் இருந்தது. இது 1982ஆம் ஆண்டில் பதிவழிக்கப்பட்ட ரூ. 430 இலட்சங்கொண்ட தொகையுடன் ஒப்பிடத்தக்கது.

கீழேயுள்ள அட்டவணை 1.49இல் எடுத்துக்காட்டப்பட்டவாறு செயற்றிட்ட பண்ட, காசு மற்றும் ஏனைய கடன்களை உள்ளடக்கிய வெளிநாட்டுக்கடன்களின் மொத்த பெறுகைகள் முன்னைய ஆண்டின் ரூ. 57,010 இலட்சங்களுடன் ஒப்பிடு

கையில் 1983இல் ரூ. 73,640 இலட்சங்களாக விளங்கின. செயற்றிட்டக்கடன்கள் ரூ. 52,900 இலட்சங்களாக அமைந்தவேளையில் பண்டக்கடன்கள்காசுக்கடன்கள்என் பனமுறையே ரூ. 14,670 இலட்சங்களாகவும் ரூ. 6,070 இலட்சங்களாகவும் காணப் பட்டன. காசுக்கடன்கள் ஐ.அ. டொலர்கள் 250 இலட்சம்பெறுமதிகொண்ட யூரோ நாணயக் கடன்களையும் கொண்டிருந்தன. மீளக்கொடுப்பனவுகளுக்காகச் சீராக்கம் செய்யப்பட்டபொழுது வெளிநாட்டுக் கடன்பாடுகளின் கீழான தேறிய பகிர்ந்தளிப் புக்கள்முன்னைய ஆண்டின் ரூ. 50,270 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 61,990 இலட்சங்களாகவிளங்கின. இவ்வாண்டுக்காலத்தில் அரசு 20செயற்றிட்டகடன்களுக் கும் 3 பண்டக் கடன்களுக்கும் உடன்படிக்கைகளைச் செய்து கொண்டது. இவ்வாண் டுக்காலத்தில் உடன்படிக்கைசெய்துகொண்ட கடன்களின்பெறுமதி 1983ஆம்ஆண்டு 31ஆம் நாளில் உள்ள செலாவணி வீதங்களில் ரூ. 54,970 இலட்சங்களாக விளங் யது. ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டில் இது ரூ. 114,480 இலட்சங்களாகக் காணப் பட்டது.

அட்டவணை 1.49

வெளிநாட்டுக் கடன்களின் முக்கிய வழங்குநர்கள் — 1983


பத்து இலட்சம் ரூபாய்களில்

| | செயற்றிட்டக் கடன்கள் | பண்டக் கடன்கள் | ஏனைய கடன்கள் |
|---|---|---|---|
| கனடா ... | 417.5 | — | — |
| சே. இ. கு. ... | 1,043.1 | — | — |
| ப. அ. அ. ... | 1,474.0 | — | — |
| ஆ. அ. வ. ... | 432.7 | — | — |
| ஐ. அ. நா. ... | 648.6 | 408.8 | — |
| யப்பான் ... | 397.3 | 339.5 | — |
| ஸ்கண்டிநாவிஸ்கா என்ஸ்கில்டா பாங்கென்ஸ் சுவீடன் ... | 272.3 | — | — |
| ஹனோவர் றஸ்ற் கூட்டு நிலையத் தயாரிப்புகள் ... | 233.2 | — | — |
| பிரான்சு | — | 271.2 | — |
| யூரோ நாணயம் ... | — | — | 606.6 |
| ஏனைய ... | 371.8 | 447.5 | — |
| மொத்த வரவுகள் ... | 5,290.5 | 1,467.0 | 606.6 |
| மீளக் கொடுப்பனவுகள் ... | 261.8 | 522.2 | 380.7 |
| தேறிய வரவுகள் ... | 5,028.7 | 944.8 | 225.9 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

1983ஆம் ஆண்டில் பொதுப்படுகடன் மீதான வட்டிக்கொடுப்பனவுகள் உள் நாட்டுப்படுகடன் மீதான ரூ. 53,140 இலட்சங்களையும் வெளிநாட்டுப் படுகடன் மீதான ரூ. 12,790 இலட்சங்களையும் உள்ளடக்கியிருந்தது. இவ்வாண்டுக்காலத்தில் உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டிக்கொடுப்பனவுகள் கடந்த ஆண்டினைவிட 27 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் வெளிநாட்டுப்படுகடன்மீதான வட்டி 40 சத வீதத்தால் அதிகரித்தது. உள்நாட்டுப் படுகடன்மீதான வட்டி ரூபாக்கடன்கள் மீதான ரூ. 32,280 இலட்சத்தினையும் திறைசேரி உண்டியல்கள் மீதான ரூ. 20 820 இலட்சத்தினையும்நிருவாகக்கடன்கள் மீதான ரூ. 30 இலட்சத்தினையும் கொண்டு

## வெளிநாட்டுப் படுகடனின் உள்ளடக்கம்




இலங்கை மத்திய வங்கி

1978ஆம் ஆண்டிலிருந்து ஏனைய] கடன்கள் ;] ப. நா. நி. பொறுப்பாண்மை நிதியக் கடனையும் உள்ளடக்கும்.

1982ஆம் ஆண்டுக்கான எண்தொகைகள் தற்காலிகமானவை.

விளங்கியது.ரூபாக்கடன்கள் மீதானவட்டிக்கொடுப்பனவுகள் 49 சதவீதம்கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்தவேளையில் திறைசேரி உண்டியல்கள்மீதான வட்டி கடந்த ஆண்டினைவிட 4 சதவீதத்தால் அதிகரித்தது. நிருவாகக் கடன்பாடுகள்மீது செலுத்தப்பட்டவட்டி மாற்றமின்றியிருந்தது. வெளிநாட்டுக்கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் செயற்றிட்டக்கடன் மீதான ரூ. 2,990 இலட்சங்களையும் பண்டக் கடன்கள் மீதான ரூ. 4,410 இலட்சங்களையும் ஏனைய கடன்கள் மீதான ரூ. 5,390 இலட்சங்களையும் உள்ளடக்குகிறது. செயற்றிட்டக்கடன்கள் பண்டக்கடன்கள் மீதானவட்டிக் கொடுப்பனவுகள் கடந்த ஆண்டினைவிட முறையே 39 சதவீதம், 27 சதவீதங்களால் அதிகரித்தவேளையில் ஏனைய கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 53 சதவீதத்தால் அதிகரித்தன. ஏனைய கடன்களின் கீழ் யூரோ டொலர் வர்த்தகக் கடன்கள் மீதான மொத்த வட்டிக் கொடுப்பனவுகள் 1982இன் ரூ 3,440 இலட்சத்துடனும் 1981இன் ரூ. 2,520 இலட்சத்துடனும் 1980இன் ரூ. 40 இலட்சத்துடனும் ஒப்பிடுகையில் 1982இல் ரூ. 4,970 இலட்சங்களாக விளங்கியது யூரோ நாணய வர்த்தகக் கடன்கள் மூன்று உடன்படிக்கைகளின்கீழ் பெறப்பட்டன. 1980இல் பெறப்பட்ட ஐ. அ. டொலர் 500 இலட்சங்கொண்ட முதலாவது கடன் மூலதன மீள் கொடுப்பனவுகளுக்கு ஒப்புதலளிக்கப்பட்ட முதல் நான்கு ஆண்டுகளைக் கொண்ட சலுகைக் காலத்தினைப் பொறுத்தவரையில் இலண்டன் வங்கிகளுக்கிடையில் வழங்கப்பட்ட வீதத்திற்கு மேலாக 0 875 சதவீத வட்டி வீதத்திலும் அந்நான்கு ஆண்டுகளுக்குப் பின்னுள்ள காலப் பகுதிக்கு இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வீதத்திற்கு மேல் 1 சதவீதத்திலும் பெறப்பட்டது. ஐ. அ. டொலர் 750 இலட்சங்கொண்ட இரண்டாவது கடன் முதல் ஆறுஆண்டு காலத்திற்கு இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வீதத்தைவிட 0.625 சதவீதத்திலும் மிகுதிஇரண்டு ஆண்டுகளுக்கும் இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வீதத்தைவிட 0.75 சதவீதம் கூடுதலான வீதத்திலும் பெறப்பட்டது. இக்கடன் மீதான மூலதன மீள் கொடுப்பனவுகளுக்காக ஐந்து ஆண்டுகளைக்கொண்ட சலுகைக்காலம் வழங்கப்பட்டது. 1982ஆம் ஆண்டில் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட ஐ. அ. டொலர் 1,000 இலட்சத்திற்கான மூன்றாவது கடன் 1982 இலும் 1983 இலும் பகுதி பகுதியாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது. இக்கடன்கள் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வீதத்தினைவிட 0.5 சதவீதத்திலும் மிகுதிஆறுஆண்டு காலப்பகுதிக்கு இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வீதத்தினைவிட கூடுதலாக 0.625 சதவீதத்திலும் பெறப்பட்டது. இக்கடன் முதன்மையான மீள்கொடுப்பனவுகளின் மீது ஐந்து ஆண்டுகள் சலுகைக் காலத்தைக் கொண்டிருந்தது. முதலாவது, இரண்டாவது கடன்கள் இரண்டும் பகிர்ந்தரிக்கப்படாததன் காரணமாக கடப்பாட்டுக்கட்டணங்கள் 0.5 சதவீதமாக விளங்கியவேளையில் மூன்றாவதுகடன் மீதான கடப்பாட்டுக் கட்டணங்கள் 0.375 சதவீதமாக இருந்தது.யப்பானிய யென் கடனின் மீதான வட்டிக்கொடுப்பனவுகள் 1982ஆம் ஆண்டின் ரூ. 3இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1983இல் ரூ. 290 இலட்சங்களாக விளங்கியது. ஆண்டொன்றிற்கு 9.4 சதவீத வட்டிவீதத்தில் பெறப்பட்ட இக்கடன் முதன்மை மீள் கொடுப்பனவுகளின் மீதான 5 ஆண்டுச் சலுகைக் காலத்தை உள்ளடக்கி 15 ஆண்டுகளில் மீளச் செலுத்தப்பட வேண்டியதாகும்.